

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. முதற்கட்டமாக திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 27.01.2025 திங்கட்கிழமை | காலை 9.00 மணி | திருவள்ளூர் மேற்கு | டி.கே.என். ரெசிடென்சி, சென்னை நெடுஞ்சாலை, திருத்தணி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 23-01-2025





சென்னை, கிண்டி காந்தி மண்டபம் வளாகம், மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபத்தில், நேற்று (25.01.2025) தமிழ்மொழி தியாகிகள் தினத்தை முன்னிட்டு மொழி போரில் சிறை சென்று உயிர்நீத்த தோழர்கள் தாளமுத்து நடராசன் உள்ளிட்டோரின் நினைவைப் போற்றும் வகையிலும், தியாகிகளை நினைவு கூரும் வகையிலும் அவர்களது திருவுருவப் படங்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் பி.டி.சி.செல்வராஜ், இரா.துரைராஜ் எம்.சி., எஸ்.குணசேகரன், எஸ்.பாஸ்கரன் எம்.சி., க.மணி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

### அனைத்து தொழில்முறைப் படிப்புகளிலும் 7.5 சதவிகித

# இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தி 'திராவிட மாடல்' அரசு சாதனை!

## உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பெருமிதம்!

**சென்னை, ஜன.27**

**அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பொறியியல், மருத்துவம், வேளாண்மை உள்ளிட்ட அனைத்து தொழில்முறை படிப்புகளிலும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தி திராவிட மாடல் அரசு சாதனை படைத்துள்ளது. மேலும் கடந்த நான்கு கல்வி யாண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 1,165 கோடி ரூபாய்க்கு மேல் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 40,168 மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை உயர்கல்வியில் முதன்மை மாநிலமாக உயர்த்தி பல்வேறு சாதனைகளைத் திராவிட மாடல் அரசு படைத்து வருகிறது.

திராவிட மாடல் அரசின் 'புதுமைப் பெண்' திட்டத்தின் மூலம் பெண்கள் உயர்கல்வி பயிலும் எண்ணிக்கை உயர்ந்துள்ளதை பல ஆய்வுகள் மெய்பித்துள்ளன.

அதேபோல மாணவர்களுக்கான 'தமிழ் புதல்வன்' திட்டத்தை செயல்படுத்தி மாணவர்கள் தங்கள் உயர்கல்வி கனவை எந்த இடையூறு இல்லாதாதவாறு சாதிக்க சாத்தியப்படுத்தியுள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர்.

இத்திட்டங்களை போலவே அரசுப்பள்ளி மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புகளை உயர்த்த வேண்டும், உயர்கல்வி சேர்க்கையில் அவர்களுக்கான உரிய வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் எனும் நோக்கத்துடன் அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பொறியியல், மருத்துவம், வேளாண்மை உள்ளிட்ட அனைத்து தொழில்முறை படிப்புகளிலும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டை திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் என 20.9.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

2021-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசாணை வெளியிடப்பட்டு அரசு பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த முன்முயற்சியின் கீழ், அரசுப் பள்ளி மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதி மற்றும் போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட மொத்த கல்விச் செலவினையும் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது.

கடந்த நான்கு கல்வியாண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 1,165 கோடி ரூபாய்க்கு மேல் விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 40,168 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். அரசுப் பள்ளி மாணவர்கள் உயர்கல்வி பயில்வதில் எத்தகைய இடையூறையும் எதிர்கொண்டு விடக்கூடாது எனும் முதலமைச்சரின் அக்கறை உள்ள நடவடிக்கையினால் இந்த சாதனை நிகழ்ந்திருக்கிறது.

குறிப்பாக தொழிற்படிப்புகளில் 35,530 பேர், மருத்துவம் சார்ந்த படிப்புகளில்



2,382 பேர், வேளாண் படிப்புகளில் 1,369 பேர், கால்நடை மற்றும் மீன்வளம் சார்ந்த படிப்புகளில் 261 பேர், சட்டப் படிப்புகளில் 626 பேர் என மொத்தம் 40,168 அரசுப்பள்ளி மாணவர்கள் கடந்த நான்காண்டுகளில் இந்த இட ஒதுக்கீட்டினால் பயனடைந்துள்ளார்கள்.

எல்லோருக்கும் எல்லாம் எனும் சமூக நீதிக் கண்ணோட்டத்தை அரசியல் இலட்சியமாக கொண்டு செயலாற்றி வரும் திராவிட மாடல் அரசு அனைவருக்கும் வாய்ப்புகள் பாகுபாடின்றி கிடைக்க வேண்டும் என்பதில் எப்போதும் உறுதியாக இருக்கின்றது.

தமிழ்நாட்டு மாணவச் செல்வங்களை பொருத்த வரை அவர்களுக்கு தந்தையாக இருந்து அவர்களுக்கான திட்டங்களை உள்ளார்ந்த அன்போடும் அக்கறையோடும் நடைமுறைப்படுத்தி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

தமிழ்நாட்டின் தெருக்களில் முதலமைச்சர் அவர்கள் நடக்கும் தருணமெல்லாம் அவரை அப்பா! அப்பா! என உள்ளன்போடு தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்கள் அழைத்து மகிழ்வது முதலமைச்சரின் இதுபோன்ற போன்ற சாதனைகளால்தான்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஆவடி மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் பழுது!

## பராமரிப்புப் பணிகள் குறித்து – சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஜன.27- புழலில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்தின் பிரதானக் குழாய்களில் நீர் அளவீடு கருவிகளை (Electro Magnetic Flow Meter) பொருத்துவதற்காக பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 28.01.2025 அன்று காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை மண்டலம் 1, 2, 3, 4, 6, 7, 8 மற்றும் ஆவடி மாநகராட்சி ஆகிய பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது என சென்னை குடிநீர் வாரியம் தகவல் தெரிவித்துள்ளது.

புழலில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்தின் பிரதானக் குழாய்களில் நீர் அளவீடு கருவிகளை (Electro Magnetic Flow Meter) பொருத்துவதற்காக பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 28.01.2025 அன்று காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை (10 மணி நேரம்) மண்டலம் 1 (திருவொற்றியூர்), மண்டலம் 2 (மணலி), மண்டலம் 3 (மாதவரம்), மண்டலம் 4 (தண்டையார்பேட்டை), மண்டலம் 6 (திரு.வி.க நகர்), மண்டலம் 7 (அம்பத்தூர்), மண்டலம் 8 (அண்ணாநகர்) மற்றும் ஆவடி மாநகராட்சி ஆகிய பகுதிகளுக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக் கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044-4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தகவல் தொடர்பு இணை இயக்குநர் வே. வெற்றிச்செல்வன் தெரிவித்துள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம் புதூர் ஊராட்சியில் கிராம சபை கூட்டத்தில் தஞ்சாவூர் தொகுதி கழக நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி கலந்து கொண்டார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாச்சியர், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், கிராம மக்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளியில் குடியரசு தின விழாவை முன்னிட்டு மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேசியக்கொடி ஏற்றி நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, மற்றும் தலைமை ஆசிரியர் கழக நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் வார்டு கழகச் செயலாளர்கள் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை த. பொன்முடி
### சனவரி 27 (2008)




திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளர், தண்டராம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட மையக் கூட்டுறவு வங்கித் தலைவர், தண்டராம்பட்டு ஒன்றியக் கழகச் செயலாளர், கிளைக் கழகச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி டி.வி.முத்துகிருஷ்ணன்
### சனவரி 27 (1990)



கழகம் துவக்கப்பட்டபோதே கழகத்தில் முக்கியப் பங்கேற்று பணியாற்றியவர்.

தமிழ்நாட்டின் திராவிட இயக்க இலட்சிய நூல்களை முதன்முதலாக தனது 'திராவிடப் பண்ணை' பதிப்பகம் மூலம் வெளியிட்டவர்.

அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'ஆரியமாயை', 'விடுதலைப்போர்' மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய 'பழக்கூடை', 'இரத்தக்கண்ணீர்', 'விடுதலை கிளர்ச்சி', 'பூந்தோட்டம்', 'பரப்பிரம்மம்' என பல்வேறு இயக்க நூல்களை வெளியிட்டவர்.

அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் அன்பில் தர்மலிங்கம் ஆகியோரின் உற்ற நண்பராக திகழ்ந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.